பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

05 11 2026 7 15

வியாழக்கிழமை காலை

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் அடுத்த மூன்று ஆண்டுகளில் தூய்மை எரிசக்தி துறையில் 220 பில்லியன் டாலர் அளவிற்கு முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. குழந்தை தொழிலாளர் தடுப்பு திருத்தச் சட்டத்தின் விதிமுறைகள் அமல்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கு சிறப்புப் பிரிவை ஏற்படுத்துமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

3. மத்தியப்பிரதேசத்தில் விவசாயிகளுக்கு தடையின்றி உரங்கள் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று ஆட்சியர்களை, அம்மாநில முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஈரானுக்கு எதிரான போர் இடைக்காலத் தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் ரேவதி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><><>

நாட்டில் அடுத்த மூன்று ஆண்டுகளில் தூய்மை எரிசக்தி துறையில் 220 பில்லியன் டாலர் அளவிற்கு முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுதில்லியில், கனடா ஓய்வூதிய திட்ட முதலீட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. Maximilian Biagosch-வுடன் நேற்று அவர் உரையாடினார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் சுமார் 20 ஆயிரத்து 340 கோடி அளவிற்கு முதலீடு செய்வதற்காக அந்நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இச்சந்திப்பின் போது, தூய்மை எரிசக்தி மாற்றத்தில் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கான வழிவகை குறித்து விவாதித்தாக அவர் தெரிவித்துள்ளார்.

பேட்டரி சேமிப்பு, மின் பரிமாற்றம், தூய்மை தொழில்நுட்ப உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் உள்ள முதலீட்டிற்கான வாய்ப்புகள் குறித்தும், திரு. பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டுள்ளார்.

<><><><><><><><>

குழந்தை தொழிலாளர் தடுப்பு திருத்தச் சட்டத்தின் விதிமுறைகள் அமல்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கு சிறப்புப் பிரிவை ஏற்படுத்துமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் எஸ்.வி.என். Bhapti, என்.வி. அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வு இதனை தெரிவித்தது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் மூலம் அமலாக்க அமைப்புகளுக்கு அறிவுறுத்துமாறு மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தை அறிவுறுத்தியுள்ளது.

<><><><><><><><>

மத்தியப்பிரதேசத்தில் விவசாயிகளுக்கு தடையின்றி உரங்கள் வினியோகம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று ஆட்சியர்களுக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் அறிவுறுத்தியுள்ளார்.

போபாலில் காணொளி காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோருடன் உரையாடிய போது இதனை தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு உரங்கள் மற்றும் இதர அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்படக்கூடாது என்று அப்போது அவர் அறிவுறுத்தினார்.

இத்தகைய சிரமங்கள் ஏற்பட்டால், மாவட்ட ஆட்சியர்கள் அதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் கூறினார்.

மழையால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் பயிர்ச்சேதங்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே, மத்தியப்பிரதேசத்தில் உரங்கள் வினியோகத்தில் எந்த சிக்கலும் கிடையாது என்று அம்மாநில வேளாண்துறை செயலாளர் இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

<><><><><><><><>

ஒடிசாவில் அர்னாப் புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட கன்ஜம், கோரக்புட் மாவட்டங்களை சேர்ந்த குடும்பத்தினருக்கு உதவுவதற்காக 107 கோடி ரூபாயை அம்மாநில அரசு விடுவித்துள்ளது.

மாநில பேரிடர் மீட்பு நிதியில் இருந்து இந்த தொகை வழங்கப்படுகிறது.

இதன் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபாய் அளிக்கப்பட உள்ளது.

கன்ஜம் மாவட்டத்திற்கு மட்டும் புயலால் பாதிக்கப்பட்ட 4 லட்சத்து 29 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு இந்த ரொக்கத் தொகை நிவாரணமாக வழங்கப்படுகிறது.

கோரக்புட் மாவட்டத்தில், ஆயிரத்து 51 குடும்பத்தினருக்கு இந்த தொகை அளிக்கப்படும் என்று ஒடிசா மாநில அரசு தெரிவித்துள்ளது.

<><><><><><><><>

தீபாவளி பண்டிகை மற்றும் Chat பூஜையையொட்டி, ஜம்முவில் உள்ள ஜம்முதாவி உள்ளிட்ட முக்கிய ரயில் நிலையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பயணிகள் அதிகளவு கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால், கூடுதல் பயணச்சீட்டு பரிசோதகர்கள், ரயில்வே பாதுகாப்புப் படையினர், ஜம்மு ரயில்வே காவல்துறையினர், சாரணர் இயக்கத்தினர், வழிகாட்டிகள் ஆகியோர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் கூடுதல் பாதுகாப்பு, போக்குவரத்து மேலாண்மை மற்றும் பொது மக்களுக்கான வசதிகள் குறித்து காவல்துறை உயரதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

<><><><><><><><>

ஜப்பானில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற இந்திய குழுவினருடன் பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று உரையாடுகிறார்.

புதுதில்லி இந்திராகாந்தி விளையாட்டரங்கில் மாலை 4-30 மணியளவில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில், வீரர்கள், பயிற்சியாளர்கள், இந்திய பாரா ஒலிம்பிக்

மற்றும் இந்திய ஒலிம்பிக் சங்கத்தை சேர்ந்த அதிகாரிகள் தேசிய விளையாட்டு கூட்டமைப்பு பிரதிநிதிகள், மத்திய இளையோர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சக அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

<><><><><><><><>

உத்தரப்பிரதேசத்தில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உயர்நிலைப் பள்ளி பொதுத் தேர்வு விடைத்தாள்களில் மாற்றத்தை ஏற்படுத்த அம்மாநில கல்வி வாரியம் முடிவு செய்துள்ளது.

அதன்படி, விடைத்தாளின் முதன்மை பக்கத்தில் QR குறியீடு இடம்பெற உள்ளது.

குறியீட்டை ஸ்கேன் செய்யும் போது, உத்தரப்பிரதேச உயர்நிலைப் பள்ளி கல்வி வாரியத்தின் லட்சினை இருக்கும் வகையில் அமைக்கப்படுகிறது.

விடைத்தாள்கள் 24 மணி நேரமும் சி.சி.டி.வி. பொருத்தப்பட்ட கண்காணிப்பு அறையில் பாதுகாக்கப்பட உள்ளது.

உயர்நிலை பள்ளி தேர்வுகள் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறுகிறது.

<><><><><><><><>

மருந்துகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், மருந்து உற்பத்தி விதிமுறைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான வரைவினை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து, சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தரமற்றவை என கண்டறியப்படும் மருந்துகளின் உற்பத்திக்கான உரிமங்களை உடனடியாக ரத்து செய்ய வகை செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

தரமற்ற மருந்துகளின் விநியோகத்தை தடுக்கவும், நோயாளிகளின் பாதுகாப்பை கருத்தில்கொண்டும், மருந்து உற்பத்தி விதிமுறைகளில் திருத்தங்களை மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

முன்னதாக, தரமற்ற மருந்துகள் கண்டறியப்பட்டால் அதை ரத்து செய்வதற்கு சில நடைமுறைகளை பின்பற்றப்படுகிறது.

இதனால், அத்தகைய மருந்துகளை சந்தைகளில் தொடர்ந்து விற்பனை செய்வதை உடனடியாக தவிர்க்க முடியவில்லை என்பதால், திருத்தங்களை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<><><><><><><>

ஈரானுக்கு எதிராக கடந்த எட்டு மாதங்களாக நடைபெற்று வரும் போர், இடைக்காலத் தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளுக்கு பிறகு வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எரிவாயு விலை உயர்வால் வாக்காளர்கள் அதிக விரக்தி அடைந்துள்ளதாக கூறினார்.

பிரதிநிதிகள் சபை, செனட் சபை ஆகிய இரண்டையும் ஜனநாயக கட்சி கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

குடியரசுக்கட்சிக்கு அரசியல் பின்னடைவு ஏற்பட்ட போதிலும், வெளியுறவு கொள்கை திட்டம், ராணுவ நடவடிக்கை ஆகியவற்றில் தாம் உறுதியுடன் இருப்பதாக கூறினார்.

ஈரானுக்கு அணு ஆயுதம் கிடைக்க செய்வதை தடுப்பதே தமது நீண்டகால நோக்கம் என்று அவர் தெரிவித்தார்.

இந்த தேர்தல் முடிவுகள் தனிப்பட்ட முறையில் தனக்கு எதிரானது அல்ல என்றும் திரு. ட்ரம்ப் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, போர் காரணமாகவே இடைக்காலத்தேர்தலில் குடியரசுக்கட்சி தோல்வி அடைந்தது என்று அமெரிக்க துணை அதிபர் திரு. J.D. Vance கூறியுள்ளார்.

<><><><><><><><>

யுக்ரைன், அமெரிக்கா, ரஷ்யா இடையேயான முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் ஒரு வாரத்திற்குள் நடைபெறும் என்று யுக்ரைன் அதிபர் திரு. Volodymyr Zelenskyy தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்டின் அபுதாபியில் வரும் 10 மற்றும் 11 ஆம் தேதிகளில் இந்நாடுகளின் ஆலோசகர் மற்றும் குழு நிலையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்பின் சிறப்பு தூதர்களுடன் நடைபெற்ற உரையாடலை தொடர்ந்து முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் குறித்து திரு. Zelenskyy தெரிவித்துள்ளார்.

தான் மாஸ்கோவிற்கு செல்வது அல்லது ரஷ்ய அதிபர் திரு. புட்டினை, யுக்ரைனுக்கு அழைப்பது குறித்த யோசனைகளை நிராகரிப்பதாக அவர் கூறியுள்ளார்.

ரஷ்யா உடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள யுக்ரைன் தயாராக இருப்பதாக திரு. Zelenskyy தெரிவித்துள்ளார்.

<><><><><><><>

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் ரேவதி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தையச் சுற்றில் அவர், 6-4, 6-3 என்ற செட் கணக்கில் போலந்தின் Weronika Falkowska -ஐ வென்றார்.

<><><><><><><>

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்றுவரும் டேவிஸ் கோப்பை ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<><><><><><><>

தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டி இன்று டாக்காவில் தொடங்குகிறது.

பிற்பகல் 3 மணிக்கு தொடங்க உள்ள ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

<><><><><><><>

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மொஹாலியில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அந்த அணி, 8-1 என்ற கோல் கணக்கில் கொரியாவை வென்றது.

Shilanand Lakra, Dilpreet Singh ஆகியோர் தலா இரண்டு கோல் அடித்தனர்.

Harmanpreet Singh, Surjeet Singh, Angadbir Singh, Vivek Sagar Prasad ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

இன்று நடைபெற உள்ள இறுதிப்போட்டியில் இந்தியா - ஜப்பானை எதிர்கொள்கிறது.

<><><><><><><>

தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில், சண்டிகர் அணி தமது இரண்டாவது இன்னிங்சில் 7 விக்கெட் இழப்பிற்கு 189 ரன் எடுத்துள்ளது.

THE <><><><><><> END